பக்கங்கள்:-22+04

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

## பொது வேட்பாளராகுமாறு ராஜிதவிடம் கோரிய ரணில்



ஜனாதிபதித் தேர்தலின்போது பொது வேட்பாளராகக் களமிறங்குமாறு எனக்குக்

06

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 03 | ஞாயிற்றுக்கிழமை | 16.06.2024 | அதிர்வு 320



# இலங்கை வரும் ஜெய்சங்கர் சம்பந்தனுடன் முக்கிய பேச்சு

### ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களையும் அவர் சந்திப்பார்

இந்தியாவில் மீண்டும் வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்றுள்ள கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கைக்கு வருகின்றார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருடன் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

06

# எதிராளிகளின் கருத்துக்களை ஒரே நிலைப்பாடாக பதிவு செய்து வழக்கை முடிவுறுத்த தமிழரசு தீர்மானம்




(கே.வசந்தன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடர்பான வழக்கில் எதிராளிகள் அனைவரினதும் மறுமொழியையும் ஒரு நிலைப்பாடாகப் பதிவு செய்து வழக்கை முடிவுறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குதெருவில் அமைந்துள்ள

06



# மன்னார் ஆயரைச் சந்தித்த ஜனாதிபதி

(எஸ்.றொசேரியன் லெம்பேட்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி மேதகு இமானுவேல் பெர்னாண்டோவை இன்று காலை மன்னார் ஆயர் இல்லத்தில் சந்தித்தார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி முன்னெடுத்துவரும் பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகளைப் பாராட்டிய மன்னாள் ஆயர், மன்னார் மாவட்ட அபிவிருத்தித் திட்டம் குறித்தும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினார்.

மன்னார் – பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவை மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மையமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் குறித்து இதன்போது கலந்தாலோசிக் கப்பட்டது. அத்துடன், சுற்றாடல் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அந்த அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மேலதிக வலுசக்தியை இந்தியாவுக்கு விற்பனை செய்வது குறித்து பேசப்பட்டு வருவதாகவும், அதற்காக இந்தியா – இலங்கைக்கு இடையிலான குழாய் இணைப்பொன்றை கட்டமைப்பது தொடர்பிலான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் நாட்களில் இடம்பெறவிருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சரின் சுற்றுப் பயணத்தின் போது அது குறித்து மேலும் கலந்துரையாட இருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதேபோல் இந்தியா – இலங்கைக்கு இடையில் தரை மார்க்க இணைப்பை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், அது குறித்து எதிர்வரும் நாட்களில் ஆராயவிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேபோல் மன்னாரை சுற்றுலா மத்தியஸ்தானமாக மாற்றுவதற்கான சாத்தியங்கள் குறித்தும், கப்பல் சுற்றுலாத் தளமாக அபிவிருத்தி செய்வதற்கான இயலுமை குறித்தும் இங்கு பேசப்பட்டது.

அதன்படி இந்த அனைத்து துறைகளின் கீழும் மன்னார் மாவட்டம் எதிர்காலத்தில் பரந்த அபிவிருத்தியை எட்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் சுட்டிக் காட்டினார்.

மன்னார் மீனவ மக்களின் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துமாறு இதன்போது மன்னார் மறை மாவட்ட ஆயர் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

மன்னார் மறை மாவட்ட விகார் ஜெனரல் அருட்தந்தை. பீ.கிறிஸ்துநாயகம், மடு மாதா தேவாலயத்தின் ஆயர் ஏ.ஞானப் பிரகாசம், பெப்பி சூசை பாதிரியார் உள்ளிட்டோரும் இதன் போது கலந்துகொண்டிருந்தனர்.












# ‘உறுமய’ திட்டத்தின் கீழ் மன்னாரில் 5 ஆயிரம் பேருக்கு காணி உறுதிகள்

(எஸ்.றொசேரியன் லெம்பேட்)

உறுமய திட்டத்தினால் மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தி, சொத்துப் பெறுமதியையும் உயர்த்த முடிந்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொவிட் தொற்று – பொருளாதார நெருக்கடியினால் சரிவடைந்த சொத்துக்களின் பெறுமதி “உறுமய” திட்டத்தின் ஊடாக வலுவடைந்திருப்பதால், அதனூடாக நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

“உறுமய” தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், மன்னார் மாவட்ட மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு மன்னார் நகர சபை மண்டபத்தில் இன்று நடைபெற்றபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்துக்கு 5 ஆயிரம் காணி உறுதிகள் வழங்கப்படவுள்ள நிலையில், அவற்றில் 442 உறுதிகள் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன. இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“கடந்த முறை வடக்கிற்கு வந்தபோது மன்னாருக்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களால் அழைப்பு விடுக்கப்பட்டது. மாத இறுத்திக்குள் வருவதாக சொன்னேன். இன்று வந்துவிட்டேன். செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அபிவிருத்தி தொடர்பில் கூறிய பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வோம்.

இங்கு வவுனியா – மன்னார் மக்கள் வந்துள்ளனர். இங்கிருந்து செல்லும்போது காணி உரிமையுடன் செல்வீர்கள். வரும்போது உரிமை இருக்கவில்லை. செல்லும் போது உரிமை இருக்கும். இந்த காணிகளை இனி உங்கள் விருப்பப்படி பயன்படுத்தலாம். வடக்கில் 90 ஆயிரம் உறுதிகள் வழங்க வேண்டியுள்ளது. அவற்றில் 40 ஆயிரம் உறுதிகள் எந்த பிரச்சினைகளும் இல்லாதவையாகும்.

கிராமங்களுக்கே சென்று அதற்குரிய பணிகளை செய்யுமாறு ஆளுநர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன். 1935 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பருத்தித்துறையிலிருந்து தேவேந்திர முனை வரையில் காணி அனுமதி பத்திரங்கள் மட்டுமே வழங்கப்பட்டன. அவற்றை எந்த நேரத்திலும் இரத்துச் செய்ய முடியும் என்பதால், காணி உறுதி குறித்து மக்களுக்கு பாதுகாப்பு இருக்கவில்லை. காணியை சுத்தம் செய்து அதற்குள் விளைச்சல் செய்து அபிவிருத்தி செய்த பின்பும் அதற்கான உரிமை மக்களுக்கு கிடைக்கவில்லை.

சிலர் 85 வருடங்களாக இந்நிலையில் இருந்தனர். 20 இலட்சம் பேர் இப்படியாக உரிமை இல்லாமல் இருக்கிறார்கள். அதனை மாற்றியமைக்க வேண்டுமென நான் தீர்மானித்தேன். கொவிட் – பொருளாதார நெருக்கடி காலங்களில் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். ஒட்டுமொத்தமாக சொத்துக்களையும் இழந்தனர். சொத்துப் பெறுமதி வீழ்ச்சி கண்டது. நாம் இப்போது வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வரும்போது அதன் நன்மைகளை சாதாரண மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க எம்மால் முடிந்த முயற்சிகளை

04















# ‘உறுமய’ திட்டத்தின் கீழ் மன்னாரில் 5 ஆயிரம் பேருக்கு காணி உறுதிகள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னெடுத்து வருகின்றோம்.

சாதாரண மக்கள், பொருளாதார நெருக்கடியால், காணிகள், சொத்துகள், செல்வங்களை இழந்தனர். அதனால் காணி அனுமதி பத்திரம் கொண்டவர்களுக்கு காணி உறுதிகளை வழங்க தீர்மானித்தேன். இந்த வேலைத்திட்டத்திற்கு முன்பாக கொவிட் – பொருளாதார நெருக்கடி காரணமாக இழக்கப்பட்டட சொத்துப் பெறுமதி உறுமய திட்டத்தினால் மீண்டும் வலுவடையும்.

ஆசியாவில் எந்தவொரு நாடும் காணி உறுதிகளை மக்களுக்கு வழங்கவில்லை. அதனால் நாம் பெரும் புரட்சி செய்திருக்கிறோம். மேல் மாகாணத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புக்களில் வசிக்கும் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வீட்டு உரிமைகளை வழங்கியுள்ளோம். சாதாரண மக்கள் பட்ட கஷ்டங்களுக்கு நியாயம் செய்திருக்கிறோம். காணி உறுதிகளின் பெறுமதிகளை வடக்கு மக்களே அதிகமாக அறிவர். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் காணிகள் புலிகளால் அபகரிக்கப்பட்டன. இராணுவம் முகாம்களுக்காக கையகப்படுத்தப்பட்டன.

தற்போது மக்களுக்கு காணிகளுக்கான நிரந்த உரிமை கிடைப்பதால் மக்கள் மகிழ்ச்சியாக வாழ கூடிய சூழல் உருவாகும். உங்களுக்கு கிடைத்த காணிகளை விற்றுவிடாமல். அபிவிருத்தி செய்து இதிலிருந்து நல்ல பயன்களைப் பெறுமாறு கூறி வாழ்த்துகின்றேன்.” – என்றார்.

கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், குலசிங்கம் திலீபன் மற்றும் மன்னார், வவுனியா மாவட்டங்களிலிருந்து இருந்து வருகை தந்த மக்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.











# உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மஸ்கெலியா ஆஸ்பத்திரியில் மரநடுகை







(மஸ்கெலியா)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் பயன்தரும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்த நிகழ்வை மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் இயங்கும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுச் செயலாளர் க.ராஜ்குமாரின் வேண்டுகோளுக்கு இணங்க கொழும்பில் உள்ள ஜன மனஷ தனியார் வணிக நிறுவனம் மேற் கொண்டது.

இந்த நிகழ்வு மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் மாவட்ட வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மஸ்கெலியா சமயத் தலைவர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, செஞ்சிலுவை சங்க நுவரெலியா மாவட்ட அதிகாரி, மஸ்கெலியா பகுதியில் உள்ள அனைத்து தோட்ட அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், மவுசாக்கலை நீர்தேக்க பகுதியில் உள்ள இராணுவ அதிகாரிகள், தோட்ட வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், பொது சுகாதார அதிகாரிகள், வைத்திய சாலையில் இயங்கும் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது வைத்திய சாலைக்கு அருகில் உள்ள இடத்தில் 200 மரக் கன்றுகள் நடப்பட்டன.



## பொது வேட்பாளராகு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கிடைத்த வாய்ப்பையே மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கினேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“2015 ஜனாதிபதித் தேர்தலின்போது பொது வேட்பாளராகக் களமிறங்குமாறு ரணில் விக்கிரமசிங்க என்னிடம் கோரினார். இதற்குரிய வாய்ப்பு எனக்கே வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அப்போது நான் அவரிடம் 24 மணி நேரம் அவகாசம் கோரினேன். அதன்பின்னர் சந்தித்தேன். தேர்தலில் வெற்றி பெற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகள் அவசியம், எனவே, மைத்திரியைக் களமிறக்குமாறு கோரினேன்.

எந்த மைத்திரி என அவர் என்னிடம் கேட்டார், நான் மைத்திரிபால சிறிசேன என்றேன். அவரை நம்ப முடியுமா என ரணில் என்னிடம் கேட்டார். நான் ஆம் நிச்சயம் என பதிலளித்தேன். ஆனால், மைத்திரி நம்ப முடியாத நபர் என்பது இன்று தெரிந்து விட்டது.” – என்றார்.

## இலங்கை வரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அத்துடன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுடனும் அவர் கலந்துரையாடல் நடத்தவுள்ளார்.

மலையகத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களையும் இந்த விஜயத்தின்போது ஜெய்சங்கர் சந்திக்கவுள்ளார்.

மேற்படி சந்திப்புக்களின்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் விவகாரம் முக்கிய இடம் பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெய்சங்கர் இந்த விஜயத்தின்போது இலங்கையில் இந்திய முதலீடுகள் மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## எதிராளிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தனியார் விருந்தினர் விடுதியில் இன்று நடைபெற்றது. அதன்பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் வழக்கு தற்போது எந்த நிலையில் உள்ளது என்பது தொடர்பான விளக்கம் அனைவருக்கும் வழங்கப்பட்டது. கடந்த தவணையில் எதிராளிகளாகப் பெயரிடப்பட்ட ஏழு பேருடன் கிளிநொச்சியைச் சேர்ந்த ஜீவராஜா என்பவர் தன்னையும் இணைத்துக்கொள்ளுமாறு விண்ணப்பம் செய்திருந்தார்.

அவரது விண்ணப்பம் தொடர்பாக ஆட்சேபனைகள் இருப்பின், அந்த ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்காக கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் யோகேஸ்வரன் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி அவகாசம் வழங்குமாறு தவணை கேட்டிருந்தார். நானும் அப்படிக் கேட்டிருக்கின்றேன். அதனையடுத்து எதிர்வரும் ஜூலை 19ஆம் திகதிக்கு வழக்கு அழைக்கப்படவுள்ளது.







அந்தவகையில் கடந்த தவணைக்கு முன்பாக கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த தீர்மானத்துக்கமைய வழக்கை முடிவுறுத்திக் கொள்வது தொடர்பாக நீதிமன்றிலே நான் கூறியிருக்கின்றேன். எதிராளிகள் முன்வைத்துள்ள ஆட்சேபனைகள் தொடர்பாக வழக்காளி தன்னுடைய நிலைப்பாட்டைத் தெரியப்படுத்த வேண்டும் என்ற காரணத்துக்காகவே கடந்த தவணை வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதுபோன்ற சிவில் வழக்குகள் தாக்கல் செய்யப்படும்போது அதில் பல படிமுறைகள் உள்ளன. அவற்றை கடந்த பின்னரே வழக்கு விசாரணைக்கு நியமிக்கப்படலாம். சாதரணமாக இவ்வாறான வழக்கில் ஒரு வருடத்துக்குப் பின்னரே முதலாவது விளக்கத்துக்கான திகதி குறிக்கப்படும். ஆனால், இந்த வழக்கில் வழக்கை முடிவுறுத்த வேண்டும் என்ற நோக்கத்துக்காக நாங்கள் குறுகிய தினத்தைக் கேட்டிருக்கின்றோம்.

அன்றைய தினம் வழக்காளி நீதிமன்றிலே தெரிவித்த விடயத்துடன், எதிராளிகள் ஏழு பேரும் அழைத்திருக்கின்ற ஆட்சேபனைகளின் அடிப்படையில் மூன்று வித்தியாசமான நிலைப்பாடுகள் எடுக்கப்பட்டன.

குறிப்பாக நானும் கட்சியின் பொதுச் செயலாளரும், நிர்வாகச் செயலாளரும் ஒரு நிலைப்பாட்டையும், மாவை சேனாதிராஜா மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் வேறொரு நிலைப்பாட்டையும், சிறீதரன், குகதாசன் ஆகியோர் இன்னொரு நிலைப்பாட்டையும் எடுத்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் கட்சி ஒரு பொதுவான நிலைப்பாட்டை எடுக்காத சூழ்நிலையில் நாங்கள் எப்படி எமது நிலைப்பாட்டை இதற்குத் தெரியப்படுத்துவது என்று அவர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இருப்பினும் கட்சி தற்போது ஒரு நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது. வழக்காளி கோரும் நிவாரணங்களை வழங்கி தெரிவுகளை மீள நடத்துவதற்குத் தான் இணங்குகின்றார் என்று சிறீதரன் கூறியிருந்தார். அதனை நீதிமன்றில் நானும் சொல்லியிருக்கின்றேன்.

இப்போது நாங்கள் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வந்துள்ள காரணத்தால் நாங்கள் ஏழு பேரும், எட்டாவது எதிராளியான இரத்தினவடிவேலும் இணைந்து, வழக்கிலே எமது மறுமொழியை ஒரு நிலைப்பாடாகப் பதிவு செய்து வழக்கை முடிவுறுத்துவதற்காக வழக்காளியோடு இணக்கப்பாட்டுக்கு வருகின்றோம் என்று கூறி வழக்கை முடிவுறுத்துவதற்குத் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்காக வழக்காளியின் சட்டத்தரணியோடு நான் பேசியிருக்கின்றேன். ஏனையவர்களின் சட்டத்தரணிகளுடன் பேசி பொது நிலைப்பாட்டுக்கு இணங்கிக் கொள்வதுடன், எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி வவுனியாவில் மத்திய செயற்குழு மீண்டும் கூடி அந்த மறுமொழியின் வரைபை மத்திய செயற்குழுவுக்குச் சமர்ப்பித்து அதன் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

அதனை அடுத்த தவணையில் நீதிமன்றில் சமர்ப்பித்து அதன் பின்னர் எமது இணக்கப்பாட்டைச் செய்யலாம் என்று தீர்மானித்திருக்கின்றோம்.” – என்றார்.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன், கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம், சட்டத்தரணி கே.வி.தவராசா உட்பட மத்திய செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

We are HIRING
# Front Office Executive

## CANDIDATE PROFILE

- Passed GCE A/L
- Strong interpersonal and communication skills.
- Excellent telephone etiquette and knowledge.
- Hands-on experience in front desk operations
- Basic computer literacy (MS Office packages)
- Outgoing personality
- Certificate / Diploma in Business Administration or a similar field will be an added advantage.

Walk-in-interview on 22-06-2024
between10.00 am to 12.00 noon



IIS CITY CAMPUS
No-655, Navalar Road, Jaffna.
021 222 8060 | 077 666 0054 | www.iis.edu.lk
IIS CITY CAMPUS



Build Your Dream Home with us....
NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"
Our Services:
- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மோடியின் வருகை திருப்புமுனை?

வரும் ஓகஸ்ட் மாதத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வருவார் என்றும் -

அது தொடர்பான முன்னேற்பாடுகளை கவனிப்பதற்காக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் வரும் வியாழனன்று கொழும்பு வருகிறார் என்றும் - செய்திகள் வெளியாகி உள்ளன.

இலங்கை நாடு அடுத்த ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் நடவடிக்கையில் முழு மும்முரமாக ஈடுபட்டிருக்கும் சமயத்தில், அண்டை நாட்டின் தலைவர் இலங்கைக்கு வருகை தருவதும் வடக்கு - கிழக்கு, மலையகம் மற்றும் தலைநகரில் நிகழ்வுகளில் அவர் பங்குபற்றுவார் என்று கூறப்படுவதும் - வித்தியாசமான ஒன்று. வழமைக்கு மாறானது.

காரணம் இல்லாமல் காரியம் நடப்பதில்லை. தேர்தல் சூட்டுக்கு நடுவிலும் இந்தியப் பிரதமரை இலங்கை அழைத்திருப்பது அல்லது அவர் தாமாக விரும்பி இலங்கை வருவது உள்ளார்த்தங்கள் பொதிந்த விடயமாகத்தான் நிச்சயம் இருக்கும்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைப் பொறுத்தவரை இது அவரது மூன்றாவது ஆட்சி காலத்தின் ஆரம்பம். அவரது பாரதிய ஜனதா கட்சியின் வயதுக் கட்டுப்பாட்டு விதியின் அடிப்படையில் இன்னொரு பதவிக் காலம் ஆட்சி செய்ய அவருக்கு வாய்ப்புக் கிடைக்கப் போவதில்லை. இதுதான் கடைசிச் சந்தர்ப்பம். அந்தப் பதவி காலத்தின் ஆரம்பத்தில் அவர் நிற்கின்றார். இவ்வேளையில் அயலுறவு சம்பந்தமாக தீர்க்கமான முடிவு எடுக்க அவர் விரும்புகிறார் எனவும் தெரிகிறது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சனைக்கு நீதி, நியாயமான, கௌரவமான, நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய ஒரு தீர்வை கண்டறிவதில் தமது கடந்த பத்து வருட ஆட்சியில் பிரதமர் மோடி காத்திரமாகச் செயற்பட்டு முன்னேறினார் என்று கூறுவதற்கில்லை.

இலங்கை வந்து திரும்பும் சமயங்களில், அவசர அவசரமாகத் தமிழ் தலைவர்களைக் கண்டு, முகமன் கூறி, குசலம் விசாரித்து விட்டு, 'புதுடில்லியில் சந்திப்போம்!' என்று கூறித் திரும்புவதுதான் அவர் வழமை. வடக்குக்கு - யாழ்ப்பாணத்துக்கு - வந்திருந்த போது கூட, தமிழ்த் தலைவர்களுடன் பரந்த அளவிலான பேச்சுகளில் அவர் ஈடுபட்டவர் அல்லர். ஒவ்வொரு தடவையும் வெளி விவகார அமைச்சுத் தயாரித்துத் தரும் 'இலங்கைத் தமிழர்களுக்கு உச்சபட்ச அதிகார பகிர்வுடன் கூடிய கௌரவமான தீர்வு வழங்கப்பட வேண்டும்' என்பதான அறிக்கை அல்லது அறிவிப்போடு அவரது கரிசனை முடிந்து விடும்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடக்க இருக்கையில், பிரதான தரப்புகளை இழுத்து வைத்து, தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து நேரத்துடனே பேசி, அடித்தளம் போடுவது நல்ல உத்திதான்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு விடயத்தில் இந்தியாவின் தலையீடு - அழுத்தம் - ஈடுபாடு - எல்லாமே அதிகபட்சம் 13 ஆவது திருத்தத்தின் முழுமையான நடைமுறையாக்கம் வரைதான் இருக்கும் என்பது தெளிவு. இந்தியா, இலங்கை ஆட்சிப் பீடத்துடன் 37 ஆண்டுகளுக்கு முன்னர் இணக்கம் கண்ட விடயம் அதுதான். அதிலும் விட அதிகமாக ஏதேனும் பெற்றுத் தர இந்தியா முன்வரவோ, முயற்சிக்கவோ போவதில்லை என்பதும் தெளிவானது தான்.

தங்களுடைய தேசிய இனப் பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தம் முழுமையான - இறுதியான - தீர்வு அல்ல என்று தமிழ் தரப்புகள் கருதினாலும், பூர்வாங்கமாக இணக்கம் காணப்பட்ட 13 ஆவது திருத்தத்தையாவது முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் நல்லிணக்கத்திற்கான அடித்தளத்தை இட முடியும் என்று தமிழர்கள் கருதுகின்றனர்.

அதேசமயம், இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான தரப்புகள் எல்லாமுமே அரசமைப்பில் உள்ள 13 வது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்தைத் தாங்கள் எதிர்க்கவில்லை என்று வெளிப்படையாக அறிவித்துள்ள சூழ்நிலையில், அந்த விடயத்தை ஒட்டியாவது தென்னிலங்கை அரசியல் தரப்புகளிடையே ஒன்றுபட்ட நிலைப்பாட்டை உறுதிப்படுத்தி, வெளிப்படுத்தி, பகிரங்கமாக அறிவிப்பதற்கு இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கை விஜயம் உதவ வேண்டும்.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை உள்நாட்டு விவகாரம், அதில் இந்தியா போன்ற அயல் தேசங்களின் மேலாதிக்கத்திற்கு இடமில்லை என்று கருதும் ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தியினர் கூட 13 ஆம் திருத்தத்தின் முழுமையான நடைமுறையாக்கத்துக்கு உறுதியளித்துள்ள சூழலில், அதன் நடைமுறையாக்கத்தையும் அதன் கீழ் விரைந்து மாகாண சபைத் தேர்தல் நடத்துவதையும் உறுதிப்படுத்த மோடியின் விஜயம் உதவ வேண்டும்





# புத்தளம் ஊடகவியலாளர்களுக்குச் செயலமர்வு



(ரஸீன் ரஸ்மின்)

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறைக்கு அறிவு பூர்வமான ஊடக நுழைவு எனும் கருப்பொருளின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் ஊடக பணியகத்தை ஸ்தாபித்தலும், ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வும் நேற்று (15) சிலாபத்தில் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் ஆலோசனையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்ன, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் சச்சிகோ விஜேயரத்ன, வடமேல் மாகாண முகாமையாளர் பத்மினி விஜேசிங்க, பணிப்பாளர் சபை உறுப்பினர்களான ஜெப் குணவர்தன, முகம்மது அஸாம், திரைக்கதை எழுத்தாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான சாமர பிரசன்ன கொடித்துவக்கு உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இந்தச் செயலமர்வில் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது, மனித கடத்தல் வியாபாரத்தை கண்டறிதலும் அதனை தடுப்பது தொடர்பில் சட்டத்தரணி ரொஹான் விஜேசேன தெளிவுபடுத்தினார்.

அத்துடன், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் நேர்மறையான அறிக்கையிடல் சம்பந்தமாகத் திரைக்கதை எழுத்தாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான சாமர பிரசன்ன கொடிதுவக்கு விளக்கினார்.

இந்தச் செயலமர்வில் கலந்துகொண்ட அனைத்து ஊடகவியலாளர்களுக்கு ஊடகம் என்று எழுத்துப் பொறிக்கப்பட்ட பாக் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.





# ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஸ்ரீலங்கா மாஸ்டர்ஸ் மெய்வல்லுனர் சம்மேளனம் ஒழுங்கு செய்த 37 ஆவது வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் கல்முனை மாநகர சபையின் தீயணைப்பு படை உத்தியோகத்தரும் சனிமௌண்ட் விளையாட்டு கழகத்தின் சிரேஷ்ட வீரருமான ஏ.எல்.எம். ஆஷாத் பங்குபற்றி ஈட்டி எறிதல் போட்டியில் 2 ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டார்.

இந்தப் போட்டி அண்மையில் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி பழைய மாணவரான இவர் விளையாட்டுத் துறையில் சிறந்த உதைபந்தாட்ட வீரரும், கிறிக்கெட் வீரருமாவார்.



# முன்பள்ளிகளுக்குக் கற்றல் உபகரணங்கள்



(த.சுபேசன்)

சாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்த மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவரத்தினத்தின் 95 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நவரத்தினம் நற்பணி மன்றம் ஊடாக சாவகச்சேரியில் தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதன் தொடக்க நிகழ்வு மீசாலை வடக்கு சுடர் ஒளி பாலர் பாடசாலையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், நவரத்தினம் நற்பணி மன்றத்தின் தலைவர் ச.தங்கராசா உள்ளிட்டோர் கலந்து கொண்டு உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்திருந்தனர்.

## பாலஸ்தீன் மீதான இஸ்ரேலின் தாக்குதல்:

# மேற்குலக பல்கலைகளுக்கு உருவான உணர்வு ஏன் தென் கிழக்கு பல்கலைக்கு ஏற்படவில்லை?

### மருதமுனை ஜம்இய்யதுல் உலமா தலைவர் அன்ஸார் மௌலானா கேள்வி



(அஸ்லம் எஸ்.மௌலானா)

பாலஸ்தீன் மீதான இஸ்ரேலின் இனவெறித் தாக்குதல்களைக் கண்டித்து மேற்குலக நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களில் மாணவர் போராட்டங்கள் வீரியமாக முன்னெடுக்கின்ற போது அந்த உணர்வானது இலங்கை தென். கிழக்கு பல்கலைக் கழகத்துக்கு ஏன் ஏற்படவில்லை.

மருதமுனை ஜம்இய்யதுல் உலமா தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான அஷ்ஷெய்க் அன்ஸார் மௌலானா இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இஸ்லாமிய வரலாற்றில் பலஸ்தீன் ஓர் இதயமாகத் திகழ்வதாலும் மூன்றாவது புனித ஸ்தலமான மஸ்ஜிதுல் அக்ஸா அங்கு அமைந்திருப்பதாலும் இதன் ஆரம்ப வரலாறு, போராட்டங்கள் நடைபெற்ற பின்னணி மற்றும் அதன் புதிய பரிமாணங்கள் தொடர்பாகத் தென் கிழக்கு பல்கலைக் கழகத்தில் ஓர் ஆய்வு மாநாட்டை நடத்த வேண்டியதன் அவசியம் உணரப்படுகின்றது.

கடந்த பல மாதங்களாக தமது சுயநிர்ணயத்துக்காகப் பலஸ்தீன மக்கள் உறுதியோடும் வீரத்தோடும் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவது எமது ஈமானிய உணர்வுகளுக்கு உரமூட்டுகிறது.

காஸாவில் தொடங்கி தற்போது ரபாவின் எல்லையில் முடக்கப்பட்டு வாழ்வதா? மடிவதா? என்ற ஜீவ மரண போராட்டத்தின் உச்சத்தை பலஸ்தீன் மக்கள் அடைந்திருக்கின்றார்கள்.

இந்த நிலையில் அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற மேற்குலக நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களில் மாணவர் போராட்டங்கள் வீரியமாக முன்னெடுக்கப்படுகின்ற போது அந்த உணர்வானது இலங்கையில் முஸ்லிம் பெரும்பான்மை அடையாளத்தைக் கொண்டிருக்கும் தென் கிழக்கு பல்கலைக் கழகத்தின் கதவை ஏன் தட்டவில்லை என்று சிவில் சமூகத்தினர் கேள்வி எழுப்புகிறார்கள்.

பலஸ்தீன் சுதந்திர இறைமையுள்ள தனி நாடாக மாறும் பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ரத்துச் செய்யும் அதிகாரத்தை அமெரிக்கா கையில் எடுத்தால் அதற்கான மாற்று வழிமுறையை சர்வதேச இஸ்லாமிய சமூகம் முன்னெடுப்பது அவசியமாகும். இவ்வாறான சூழ்நிலையில் பலஸ்தீன் தொடர்பான ஓர் ஆய்வு மாநாட்டின் மூலம் தெளிவையும் தீர்வையும் பெறலாம் என்று சிவில் சமூகங்கள் எதிர்பார்க்கின்றன.

ஆகையால் இனியும் தாமதியாமல் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் பலஸ்தீனம் தொடர்பிலான ஆய்வு மாநாடு ஒன்றை அவசரமாக நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் முன்வர வேண்டும்.- என்றார்

# பிரதிப் பிரதம செயலாளர் அஸ்மிக்கு கல்முனை மாநகர சபையில் கௌரவிப்பு




(அஸ்லம் எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி) பதவி உயர்வு பெற்றுள்ள கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை (13) கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, நிதி உதவியாளர் யூ.எம். இஸ்ஹாக், சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் முபீனா பைஸல் அமான் ஆகியோர் வாழ்த்துரைகளை நிகழ்த்தினர்.

இதன்போது ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, கல்முனை மாநகர சபை சமூகம் சார்பில் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மாநகர சபையின் சிரேஷ்ட வருமானப் பரிசோதகர் ஏ.ஜே. சமீம் நிகழ்வை நெறிப்படுத்தியிருந்தார். இந்த நிகழ்வில் மாநகர சபையின் உள்ளூராட்சி உத்தியோகத்தர் தாரிக் அலி சர்ஜூன், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம் உட்பட பிரிவுத் தலைவர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் பங்கேற்றனர்.




# மட்டு. நகரில் சர்வதேச யோகா தினம்

(வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு மட்டகளப்பு வாழும் கலை அமைப்பு இன்று ஞாயிற்றுகிழமை காலை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் யோகா பயிற்சி வழங்கியது.

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமினி சாத்வி ஜீ இந்தப் பயிற்சியை வழங்கினார். 13 வயதுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.









## சர்வதேச பிறை அடிப்படையில்

# அக்கரைப்பற்றில் நடைபெற்ற ஹஜ்ஜு ப் பெருநாள் தொழுகை



(றிஸ்வான் சாலிஹு)

அக்கரைப்பற்று அஹ்லுஸ்ஸுன்னாஹ் ஜும்ஆ மஸ்ஜித் ஏற்பாடு செய்த சர்வதேசப்பிறை அடிப்படையிலான புனித ஹஜ்ஜுப் பெருநாள் (ஈதுல் அழ்ஹா) தொழுகை மற்றும் பேருரை அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (16) காலை 6.30மணிக்கு நடைபெற்றது.

இந்தப் பெருநாள் தொழுகை மற்றும் பேருரையை மௌலவி எம்.ஐ.அன்ஸார் (துப்லிகி) நிகழ்த்தியதோடு, இதில் பெருந்திரளான ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர்.

நபி இப்றாஹீம் (அலை) செய்த தியாகம், முஸ்லிம் சமூகம் தங்களது குடும்ப உறவுகளுடன் நல்லுறவாகவும், ஏனைய இன சமூகத்துடன் ஒற்றுமை, சாந்தி, சமாதானமாக நடக்க வேண்டும் என்பதுடன், இறைவனுக்காக இன்றைய தினம் அறுத்து பலியிடக் கூடிய உழ்ஹியா மாமிசத்தை நாமும் உண்டு பிற மத சகோதரர்களுக்கும் கொடுத்து நமது இன உறவை பலப்படுத்துவதோடு, நமது பெற்றோர்களோடு அன்பாகவும் பாசமாகவும் அவர்களை அரவணைத்துக் கொள்ள வேண்டும் என்பதோடு, குடும்ப உறவுகளைத் துண்டித்து வாழ்பவர்கள் அப்படி இருந்தால் இறைவனுக்காக அவர்களோடு சேர்ந்து வாழ வேண்டும் என்று பெருநாள் பேருரையில் மௌலவி எம்.ஐ.அன்ஸார் (துப்லிகி) வலியுறுத்தி தெரிவித்தார்.

# சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகன்ற இரண்டு பேர் பொலிஸாரால் நேற்று கைது!

(மஸ்கெலியா)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மவுஸ்சாக்கலை சீட்டின் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வுப் பணியில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் (14) கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியா ரக்காடு கிராமத்தில் உள்ள அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா பிரதேசத்தைச் சேர்ந்த 37 மற்றும் 49 வயதுடைய இரண்டு நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து மாணிக்கக் கல் அகழ்வு பணிக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் மீட்கப்பட்டன என்று அதிரடி படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பாதையில் யாத்திரீகர்கள் அம்பாறைக்குள் பிரவேசம்!

( வி.ரி.சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச்சந்நதி, கதிர் காமம் பாதயாத்திரைக் குழுவினர் 35 ஆவது நாளில் இயந்திரப் படகுப் பாதையில் பயணித்துக் களுவாஞ்சிக் குடி ஊடாக அம்பாறை மாவட்டத்தை அடைந்துள்ளனர்.

மண்டூர் – குறுமண்வெளி இயந்திரப் படகுப் பாதையில் பாதயாத்திரீகர்கள் பயணித்தனர்.

யாழ்ப்பாணம் செல்வச் சந்நதி ஆலயத்தில் இருந்து கடந்த மாதம் 11 ஆம் திகதி புறப்பட்ட ஜெயாவேல்சாமி தலைமையிலான கதிர்காம பாதயாத்திரை குழுவினர் ஐந்து மாவட்டங்களைக் கடந்து நேற்று சனிக்கிழமை ஆறாவது மாவட்டமான அம்பாறை மாவட்டத்துக்குள் பிர வேசித்துள்ளனர்.

கடந்த 35 நாள்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல் லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கடந்து நேற்றுமுன்தினம் அம்பாறை மாவட்டத்துக்குள் பிரவேசித்துள்ளனர்.

புதன்கிழமை இரவு மண்டூர் கந்தசாமி ஆலயத்தில் தரித்து நின்ற அவர்கள் நேற்றுக் காலை மண்டூர்– குறுமண்வெளி ஆற்றை, பாதை சேவையால் கடந்து களுவாஞ்சிக்குடியை அடைந்தனர்.



கல்லாறு கடலாச்சி அம்மன் ஆலயத்தைத் தரிசித்து இரவு பெரிய நீலாவணை நாககன்னி ஆலயத்தில் நின்றனர். பின்னர் கல்முனை ஊடாக காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயத்தை வந்தடைந்தனர்.

எதிர்வரும் 29 ஆம் திகதி உகந்தை மலையை அடைய இருக்கின்றனர்.

# சிலாபத்தில் ''வெல்வோம் ஸ்ரீலங்கா'' நடமாடும் சேவை!




(எம்.எச்.எம் சியாஜ்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் சிலாபம் ஷேர்லி கொரேயா விளையாட்டரங்கில் நேற்று முன்தினமும் (14), நேற்றும் "வெல்வோம் ஸ்ரீலங்கா" நடமாடும் சேவை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் அலி சப்ரி ரஹீம் அதிதியாக கலந்து கொண்டார். இதன்போது புத்தளம் மாவட்டத்தில் உள்ள 16 பிரதேச செய லகங்களில் காணப்படும் பாடசாலைகளுக்கு "ஸ்மார்ட் போட்" வழங்கி வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கரு திட்டமான டிஜிட்டல் மயமாக்கலுடன் தொடர்புடைய புதிய தொழில் உலகத்துக்கு ஏற்ற ஸ்மார்ட் தொழிலாளர்களை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்ட இந்த நடமாடும் சேவை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காராவின் தலைமையில் நாடளாவிய ரீதியில் தேசிய வேலைத் திட்டமாக ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

"வெல்வோம் ஸ்ரீ லங்கா" மக்கள் நடமாடும் சேவையானது இதுவரை பதினாறு மாவட்டங்களில் இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் மக்கள் பல்வேறு நன்மைகளைப் பெற்றுள்ளனர்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அனைத்து இணை நிறுவனங்களும் ஒன்றிணைந்து இந்த நடமாடும் சேவையை ஏற்பாடு செய்திருந்தன.

# இஸ்ரேலின் தயாரிப்புப் பொருள்களை பெருநாள் கொண்டாட்டங்களில் தவிர்ப்போம்

## கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் கலீலுர்ரஹ்மான் தெரிவிப்பு



பலஸ்தீனுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இஸ்ரேலின் தயாரிப்புகளை பெருநாள் கொண்டாட்டங்களில் தவிர்ப்போம் என்று கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ. கலீலுர்ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

நபி இப்றாஹீமினதும், அவர்களது குடும்பத்தினதும் தியாகங்களை நினைவு கூரும் வகையில் உலக முஸ்லிம்களால் கொண்டாடப்படும் தியாகத் திருநாளாம் இப்புனித ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும நல்வாழ்த்துக்கள்.

இலங்கையில் இன்று நாம் புனித ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் இத்தருணத்தில் இந்த நாட்டு சிறுபான்மையின மக்கள் மட்டுமல்ல உலகம் வாழ் மக்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளதை நாம் எல்லோரும் அறிவோம்.

பலஸ்தீன பூமியில் பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்கள் இன்னமும் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாமல் அல்லற்பட்டுக் கொண்டு இஸ்ரேலிய கொடூரர்களால் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில்தான் நாம் இன்று ஹஜ்ஜுப் பெருநாளை இலங்கையில் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். அவ்வாறு யுத்த அவலங்களால் பாதிக்கப்பட்ட எமது சகோதரர்களில் கணிசமானவர்கள் இன்னமும் அகதி முகாம்க-ளில் அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஆறுதலளிக்கும் வகையில் எமது பெருநாள் துஆக்களில் அவர்களையும் இணைத்து கொள்வோம்.

எமது பெருநாள் கொண்டாட்டங்களில் இஸ்ரேலுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் பெருந்தொகை உதவிகளை, ஆயுத பலங்களை வழங்கும் உணவகங்கள் மற்றும் பானங்களை தவிர்க்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இஸ்ரேலின் நண்பர்களை, பலஸ்தீனின் உறவுகளாக உள்ள நாம் வளர்க்க முன்வரக்கூடாது. மேற்கத்தைய உணவகங்கள், இஸ்ரேல் ஆதரவு தயாரிப்புக்கள், குளிர்பானங்களை பெருநாள் கொண்டாட்டங்களில் தவிப்பதுடன் அவற்றை நிரந்தரமாகப் புறக்கணிக்கச் செய்வதே பலஸ்தீனர்களுக்கு நாம் செய்யும் சிறிய உதவியாக இருக்கும்.

மேலும் புனித ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் இந்த நாளில் நாட்டில் இனங்களுகக இடையில் பரஸ்பரம் புரிந்துணர்வும், நம்பிக்கையும் ஏற்படுவதற்கும், சட்டமும் ஒழுங்கும் கடைப்பிடிக்கப்படுவதற்கும், நீதியும் நேர்மையும் மிக்கதோர் அரசு எதிர்காலத்திலும் அமைய நாம் எல்லோரும் பிரார்த்திப்போம்.

அதேபோல் உலகளாவிய ரீதியில் புனித தீனுல் இஸ்லாத்தின் எழுச்சி வெற்றிக்காகவும் உலகளாவிய முஸ்லிம் உம்மாவின் நல்வாழ்வுக்காகவும் நாமெல்லோரும் பிரார்த்திப்போம். – என்று தெரிவித்துள்ளார்.

# கிண்ணியா அல்-அமான் அரபுக் கல்லூரி முதலாவது பட்டமளிப்பு விழா நிகழ்வுகள்





(கியாஸ் ஷாபி)

கிண்ணியா அல் – அமான் அரபிக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு வியாழக்கிழமை (13) கல்லூரி முன்றலில் நடைபெற்றது.

கல்லூரியின் தலைவர் ஏ. எஸ். மாஹில் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் 31 ஹாபிழ்களும் 47 உலமாக்களும் பட்டம் பெற்று வெளியேறினர்.

அரபிக் கல்லூரியின் அதிபர் மௌலவி கைஸ் மற்றும் மௌலவி மூதூர் சௌமி கரீம் ஆகியோர் இங்கு விசேட உரையாற்றினர்.

இந்தக் கல்லூரின் ஆசிரியர்கள், ஏழாம் ஆண்டு மாணவர்களால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.




# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்துள்ளார் திருமலை சாதனை வீரன் ஹஷன் ஸலாமா

(மன்னார் லெம்பேட்)

திருகோணமலையை சேர்ந்த முஹம்மட் ஹஷன் ஸலாமா நேற்று சனிக்கிழமை இந்தியாவின் தனுஷ்கோடியில் இருந்து இலங்கையின் தலை மன்னாருக்கிடையிலான 42 கிலோ மீற்றர் தூரத்தை உடைய பாக்கு நீரிணையை நீந்தி சாதனை படைத்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை 02 மணிக்குத் தொடங்கி முற்பகல் 11 மணியளவில் நீந்தி முடித்துள்ளார்.

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த இலங்கையின் எட்டாவது நபராகவும், பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த உலகின் முதலாவது முஸ்லிம் நபராகவும் ஹஷன் ஸலாமா திகழ்கிறார்.

தரம் 10 இல் கல்வி கற்கும் 15 வயதான இவர் கடந்த மூன்று மாதங்களாக இந்தச் சாதனை முயற்சிக்கான தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி இவர் பாக்கு நீரிணையின் இலங்கை கடல் எல்லையில் இருந்து தலை மன்னார் வரையான தூரத்தை பயிற்சி அடிப்படையில் நீந்திக் கடந்துள்ளார்.

இவருக்கான நீச்சல் பயிற்சிகளை விமானப்படை கோப்ரல் றொசான் அபேசுந்தர வழங்கியுள்ளார்.

மேலும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த திருகோணமலையைச் சேர்ந்த ஹறிகரன் தன்வந்தையையும் இவரே பயிற்றுவித்திருந்தார்.

இலங்கையரான இள வயதையுடைய பஹ்மி ஹஸன் சலாமா நாட்டின் விளையாட்டு வரலாற்றிலே தனது பெயரை பதிந்து கொள்வதற்காக தனது இலக்கை அடைந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

திருகோண மலையில் உள்ள கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தால் நடத்தப்பட்ட அகில இலங்கை கடல் நீச்சல் போட்டியில் வெற்றியாளராக இவர் தெரிவாகி இருக்கின்றார்.

பஹ்மி ஹஸன் சலாமா விளையாட்டுத் துறைக்கு அப்பால் சென்று, தனது அர்ப்பணிப்புகளூடாக நீருக்குக் கீழான சுத்திகரிப்புப் பணிகள் மற்றும் கடற்பாதுகாப்பு செயன்முறைகள் தொடர்பாகவும் தனது நேரடி பங்களிப்பை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.











# பாடும்மீன் ஸ்ரீகந்தராசாவின் நூல்கள் சிட்னியில் வெளியீடு


சிட்னியில் செந்தமிழ்ச் செல்வர், பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசாவின் “சங்க இலக்கியக் காட்சிகள்”, “இன்னும் கன்னியாக” என்ற இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன.

சிட்னி, தூங்காபீ செயின்ட். அந்தனி தேவாலய மண்டபத்தில் அண்மையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பிரபல எழுத்தாளர் மாத்தளை சோமு தலைமையில், கவிஞரும், ஒலிபரப்பாளருமான சௌந்தரி கணேசன், எழுத்தாளரும், ஒலிபரப்பாளருமான கானா பிரபா, மாணவர்களான செல்வன் அகலவன் ஸ்ரீஸ்கந்தராசா, செல்வி வேதவர்ணா ராஜா ஆகியோர் நூல்களுக்கான அறிமுக உரைகளை நிகழ்த்தினர்.

பிரபல கவிஞர் நவாலியூர் இளமுருகனார் பாரதி, எழுத்தாளர் ஆசி.கந்தராசா, ஆசிரியர் திருநந்தகுமார் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.










# வைத்திய உபகரணங்கள், போதிய மருந்துகள் இன்றி உரிய சேவைகள் வழங்க வைத்தியர்களால் முடியாது!

## கிழக்கு பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் இமாமுத்தீன் மௌலானா தெரிவிப்பு

(அபு அலா)

நோயாளர்களுக்கு சிறந்த வைத்திய சேவைகளை வழங்குவதாக இருந்தால் வைத்தியர்களின் பங்களிப்புகள் மட்டும் போதாது. அதற்கான வைத்திய உபகரணங்கள், மருந்துகள், ஆளணிகள் போன்ற பல தேவைகள் உள்ளன என்று கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் இமாமுத்தீன் மௌலானா தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் புதிய அபிவிருத்திக் குழு உறுப்பினர்களின் நிர்வாகத் தெரிவும், முதலாவது நிர்வாக சபைக் கூட்டமும் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் யூ.எல்.எம்.வபா தலைமையில் நேற்று முன்தினம் (14) வைத்தியசாலையின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்தியசாலையின் சேவை மிகத் திறன்பட இயங்க வேண்டுமாக இருந்தால் அந்த வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் செயற்பாடுகள் நன்றாக இருக்க வேண்டும். அத்துடன் வைத்தியசாலை மீதான பார்வை மற்றும் தொடர்பாடல்கள் மிக அதிகமாக இருந்தால்தான் அந்த வைத்தியசாலையின் வைத்திய சேவைகளுடன் அபிவிருத்திகளும் சிறந்த முறையில் இடம்பெறும்.

எமது வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருகின்ற நோயாளர்களுக்குச் சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்பட்டு, அவர்கள் சுகம் பெற்றவர்களாக, திருப்தியான முறையில் செல்லவேண்டும் என்பதே எமது எல்லோருடைய நோக்கமாக இருக்கவேண்டும்.- என்றார்.

வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் 'நெபுலைசர்' ஒன்று இல்லாமல் பாரிய சிரமங்களை நாங்கள் எதிர்நோக்கி வருகின்றோம் என்று வைத்தியசாலை பொறுப்பதிகாரியால் இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஏ.என்.எவ். தனியார் மருத்துவ உபகரண விநியோக நிறைவேற்றுப் பணிப்பாளரும் அபிவிருத்திக் குழு உறுப்பினருமாகிய எ.எல்.எ.கபூர் உடனடியாக 'நெபுலைசர்' ஒன்றை வழங்கிக் குறைபாட்டை நிவர்த்தி செய்து வைத்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் புதிய அபிவிருத்திக் குழு நிர்வாகத்தினராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் யூ.எல்.எம்.வபா நிறுவனத் தலைவர் என்ற ரீதியில் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக ஆசிரிய ஆலோசகர் எம்.எப்.முஹம்மது நழீர், பொருளாளராக அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முஹம்மது றியாஸ், உப செயலாளராக ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

உறுப்பினர்களாக, தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளரும் அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் தலைவருமான ஏ.எச்.ஹனீஸ், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர், அதிபரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமாகிய ஏ.எல்.அஜ்மல், ஏ.என்.எவ். தனியார் மருத்துவ உபகரண நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எ.எல்.எ.கபூர், அட்டாளைச்சேனை தள ஆயுள்வேத வைத்தியசாலையின் மருந்துக் கலவையாளர் ஏ.எல்.முஹம்மட் புகாரி, இலங்கை வங்கி அட்டாளைச்சேனை கிளையின் ஓய்வுபெற்ற முகாமையாளர் ஏ.சி.கியாஸ்டீன், மக்கள் வங்கி உத்தியோகத்தர் எம்.ஐ.முஹம்மது நபீல், ஏ.பி.தீனுல்லாஹ், ஓய்வுபெற்ற சமுக சேவை உத்தியோகத்தர் எம்.ஐ.அன்வர், ஓய்வுபெற்ற கிராம சேவகர் எஸ்.எல்.ஏ.சமட், அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர் எம்.ஏ.றமீஸ், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் எம்.ஏ.சிறாஜ் அஹமட் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நடை பயணம்

(த.சுபேசன்)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்ட நடை பயணம் நேற்று (15) சனிக்கிழமை இடம்பெற்றது.

மீசாலை சந்தியில் காலை ஆரம்பித்த இந்த நடை பயணம் ஏ-9 வீதி ஊடாக பாடசாலையை வந்தடைந்திருந்தது.

இந்த நடை பயணத்தில் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,பழைய மாணவர்கள், பாடசாலையின் சாரணர் அணியினர், பாண்ட் அணியினர், விளையாட்டு அணியினர், சுற்றாடல் முன்னோடிக் கழகத்தினர், புத்தாக்க கழகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# தேர்தலாலோ, அரசியலாலோ உலகை மாற்ற முடியாது; நல்ல சிந்தனைகளால் மாத்திரமே அது சாத்தியமாகும்!

## இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண ஆளுநர்

(கியாஸ் ஷாபி)

இந்த நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து ஒன்றரை வருட காலத்துக்குள் மீட்டெடுத்த பெருமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே சாரும் என்பதை இந்தக் கட்டட திறப்பு, சான்று பகர்கின்றது.

தேர்தலாலோ, அரசியலாலோ உலகை மாற்ற முடியாது. நல்ல சிந்தனைகளால் மாத்திரமே அது சாத்தியமாகும்.

இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

கிண்ணியா அல் ஹிறா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில் 12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கணித ஆய்வுக்கூடம் மற்றும் வகுப்பறை கட்டடம் ஆகியவற்றை நேற்றுத் (15) திறந்து வைத்து, உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆளுநர் இங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடியான காலகட்டத்திலும் கல்வியைப் பாதுகாக்க வேண்டியது நாட்டை நேசிப்பவரகளது பாரிய பொறுப்பாகும். இந்தக் காலகட்டங்களிலும் கல்விக்கான நிதியைத் தாராளமாகச் செலவு செய்யும் ஜனாதிபதியின் சிந்தனை ஒரு தூர நோக்கான இலக்கை நோக்கியதாகும்.

மின்சார நெருக்கடி, எரிபொருளுக்கான வரிசை, போக்குவரத்து நெருக்கடி போன்ற சவால்களை எதிர் கொண்ட மக்கள், இன்று படிப்படியாகப் பொருளாதார இஸ்திர நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

மிகவும் பாதாளத்துக்குள் தள்ளப்பட்டுள்ள இலங்கையின் பொருளாதாரத்தை, திடீரென உயர்த்த முடியாது. அது ஒன்றும் வித்தையல்ல.

அறிவாலும் கல்வியாலும் செய்யப்பட வேண்டிய ஒன்று. கல்வியால் மாத்திரமே உலகில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். தேர்தலாலும் அரசியலாலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.– என்றார்.

பாடசாலை அதிபர் எம். எஸ். நஷ்ரீர்தீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். குலேந்திரகுமார், கிண்ணியா வலயக்கல்விப் பணிப்பளர் எஸ். நலீம், கிண்ணியா பிரதிக் கல்வி பணிப்பாளர் யூ. எல். சிராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.







# கொழும்பு திண்மக் கழிவுத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்தன

## ஓகஸ்ட் முதல் செயற்பாடுகள் ஆரம்பம்

கொழும்பு பெருநகரத் திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன. அதன் செயற்பாடுகள் ஓகஸ்ட் மாதத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என்று கொழும்பு மாநகர கழிவு முகாமைத்துவ திட்டத்தின் பணிப்பாளர் சரத் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் பரீட்சார்த்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த ஒத்திகை சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த திட்டம் 2014 இல் அப்போதைய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சால் ஆரம்பிக்கப்பட்டது.

கொழும்பில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நகர்ப்புற திண்மக்கழிவு அகற்றல் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், புத்தளம் அருவக்காலு பகுதியில் உள்ள கைவிடப்பட்ட குழிகள், சுகாதார கழிவுகளை அகற்றும் வசதி மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பை நிர்மாணிக்கும் பணியை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

களனி மற்றும் புத்தளத்தில் 02 கழிவுப் பரிமாற்ற நிலையங்களை நிர்மாணிப்பதும் அது தொடர்பான போக்குவரத்து உட்கட்டமைப்புகளை மேற்கொள்வது தொடர்பிலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பெருநகரத்தைச் சுற்றி சேகரிக்கப்படும் 1200 மெற்றிக் தொன் குப்பைகளை களனி குப்பை பரிமாற்ற நிலையத்துக்குக் கொண்டு வந்து சுருக்கி கொள்கலன்களில் அடைத்து ரயிலில் கொண்டு சென்று அருவக்காலுவில் சுகாதாரமான முறையில் அப்புறப்படுத்த இந்த திட்டம் முதலில் திட்டமிடப்பட்டது.

எவ்வாறாயினும், மேல் மாகாணத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களால் அகற்றப்படும் எஞ்சிய கழிவுகள் அனைத்தும் சுகாதாரமான முறையில் அகற்றப்படும் வகையில் இந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திட்டத்தின் மொத்த செலவு 130 மில்லியன் அமெரிக்க டொலர்கள். களனி இடமாற்ற நிலையத்தில் இருந்து அருவக்காலு குப்பைக் கிடங்குக்கு ரயிலில் குப்பைகளை கொண்டு செல்வதற்காக 04 ரயில் இன்ஜின்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடங்கும் வரை பயணிகள் போக்குவரத்துக்குப் பயன்படுத்த ரயில்வே திணைக்களத்துக்கு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. குப்பை போக்குவரத்துக்குத் தேவையான 94 கொள்கலன் பெட்டிகள் வாங்கப்பட்டுள்ளன. களனியிலிருந்து அருவக்காலுக்கு குப்பைகளை கொண்டு செல்வதற்கு தேவையான 17 ரயில்கள் திருத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பின்னர், திட்டத்தின் ஒப்பந்ததாரர்கள் 03 மாத காலத்துக்குத் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு பயிற்சி அளித்து, குப்பை சேகரிப்பு முற்றத்தின் செயல்பாட்டை மேற்பார்வையிடுவார்கள்.

அருவக்காலு குப்பைத் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை சீன நிறுவனமான சைனா ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனம் மற்றும் சீனாவின் சௌத்வெஸ்ட் முனிசிபல் இன்ஜினியரிங் அன்ட் ரிசர்வ் இன்ஸ்டிடுட் ஒப் சைனா நிறுவனம் ஆகியவை மேற்கொண்டன.

தற்போது, 140 ஏக்கர் பரப்பளவில் அருவக்காலுவில் கழிவு சேமிப்பு மையம் மற்றும் 20 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள வனவாசல கழிவு பரிமாற்ற மையம் ஆகியவற்றின் பணிகளும் நிறைவடைந்துள்ளன.

இந்தத் திட்டம் கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, ஒரு வருடத்துக்கும் மேலாக திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை நிறைவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 5,500 மில்லியன் ரூபாவகும்.



# விக்கிரவாண்டி இடைத்தேர்தலை புறக்கணிக்க அ.தி.மு.க தீர்மானம்

## ‘மேலிட’ உத்தரவே காரணமென ப.சிதம்பரம் விமர்சனம்



“விக்கிரவாண்டி இடைத்தேர்தலை புறக்கணிக்கும் அ.தி.மு.கவின் முடிவுக்கு, தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளரின் தேர்தல் வாய்ப்பை எளிதாக்க வேண்டும் என்ற ‘மேலிடத்தின்’ உத்தரவே காரணம்.”

- இவ்வாறு காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “விக்கிரவாண்டி இடைத்தேர்தலை புறக்கணிப்பது என்ற முடிவை அதிமுக எடுத்திருக்கிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளரின் தேர்தல் வாய்ப்பை எளிதாக்க வேண்டும் என்ற ‘மேலிட’ உத்தரவு அக்கட்சிக்கு வந்துள்ளது என்பதற்கு அக்கட்சி எடுத்துள்ள முடிவே தெளிவான சான்று. தங்களுக்குப் பதிலாக பா.ம.கவை நிறுத்தி, பா.ஜ.கவும், அ.தி.மு.க. தி.மு.க.வுக்கு எதிராக போட்டியிடுகின்றன. தி.மு.க. வேட்பாளர் அமோக வெற்றி பெறுவதை இண்டியா கூட்டணி உறுதி செய்ய வேண்டும்.” என்று தெரிவித்துள்ளார்.

ப. சிதம்பரத்தின் இந்த கருத்துக்கு எடப்பாடி பழனிசாமி பதில் அளித்துள்ளார். மதுரையில் திருமண நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பின் இதுதொடர்பாக செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய எடப்பாடி பழனிசாமி,

“அ.தி.மு.க. வலிமையோடு இருக்கிறது. ப.சிதம்பரத்துக்கும், அ.தி.மு.கவுக்கும் என்ன சம்பந்தம் உள்ளது. தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் வந்தது. ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் ஜனநாயகப் படுகொலை நடந்தது. வாக்காளர்களை சுதந்திரமாக வாக்களிக்க விடாமல், ஆடு மாடுகளை பட்டியில் அடைப்பது போல் அழைத்துசென்ற காட்சியை பார்த்தோம். தேர்தல் ஆணையம் அதனை கண்டுகொள்ளவில்லை.

தேர்தல் ஆணையம், பொலிஸ், அரசு அதிகாரிகள் மாநில அரசுக்கு துணைபுரிகிறார்கள். அமைச்சர்கள் அங்கேயே முகாமிட்டு, ஆட்சி அதிகாரம், பணபலத்தை பயன்படுத்தி, பரிசு பொருள்களை கொடுத்து ஈரோடு கிழக்கில் தேர்தல் நடந்தது. இதே போல், சுதந்திரமாக தேர்தல் நடக்காது என்பதால்தான் விக்கிரவாண்டி இடைத்தேர்தலை அ.தி.மு.க. புறக்கணிக்கிறது. நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் விக்கிரவாண்டி சட்டப்பேரவையில் அ.தி.மு.க, தி.மு.க. கூட்டணியை விட 6 ஆயிரம் வாக்குகள் தான் குறைவு. அப்போதே எங்களுக்கு என்ன வாக்குகள் கிடைக்கும் என்பது தெரிந்துவிட்டது. மறுபடியும் போட்டியிட நினைத்தால் விடமாட்டார்கள்.

சுதந்திரமாக மக்கள் வாக்களிக்க முடியாததால் விக்கிரவாண்டி இடைத்தேர்தலை அ.தி.மு.க. புறக்கணிக்கிறது.” என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இடைத்தேர்தல் போட்டியில் இருந்து அ.தி.மு.க. விலகி இருப்பது குறித்து கருத்து தெரிவித்துள்ள தமிழக பா.ஜ.க. துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி,

“நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் பல தொகுதிகளில் பா.ஜ.க, அ.தி.மு.கவை 3 ஆம் இடத்துக்கு தள்ளி இருக்கிறது. பல தொகுதிகளில் அ.தி.மு.க. கட்டுப்பணம் பெற முடியாத நிலை ஏற்பட பா.ஜ.கவே காரணம். தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, தி.மு.க-வை எதிர்க்கக் கூடிய வலிமையான கட்சி என்றால் அது பா.ஜ.கதான் என்ற பேச்சு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சி என்றால் தேர்தலில் போட்டியிட வேண்டும். எங்கள் கூட்டணி போட்டியிடுகிறது. தேர்தல் தோல்வி குறித்த பயம் காரணமாக அதிமுக போட்டியில் இருந்து விலகி இருக்கிறது. தமிழ்நாட்டில் தேர்தல் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் சக்தியாக பா.ஜ.க. உருவெடுத்துள்ளதை இது நிரூபித்துள்ளது.” என தெரிவித்துள்ளார்.

# மைத்தேயி இனத்தவரின் 2 வீடுகளுக்கு தீ; மணிப்பூர் மாநிலத்தில் மீண்டும் பதற்றம்!

மணிப்பூரில் தொடர்ந்து கலவரச் சம்பவங்கள் நடந்து வருகின்றன. இந்நிலையில் நேற்று மைத்தேயி இனத்தைச் சேர்ந்த 2 நபர்களின் வீடுகளுக்கு ஒரு கும்பல் தீ வைத்துள்ளது. இதனால் அங்கு மீண்டும் பதற்றம் நிலவுகிறது.

இந்த நிலையில், அப்பகுதியில் தலையை வெட்டி ஒருவர் கொலை செய்யப்பட்டு உள்ளார்.

மணிப்பூர் மாநிலத்தில் குக்கி மற்றும் மைத்தேயி இனத்தவர்களுக்கு இடையே கடந்த ஆண்டு மே மாதம் முதல் கடுமையான மோதல் ஏற்பட்டு கலவரம் நிகழ்ந்து வருகிறது.

மைத்தேயிகளுக்கு பழங்குடியின அந்தஸ்து வழங்குவதால் அவர்கள் தங்களின் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வர் என்று குக்கி இனத்தவர் அஞ்சுகின்றனர். இரு இன மக்களிடையே மோதல் ஏற்பட இது முக்கிய காரணமாக அமைந்தது.

மணிப்பூரில் நடைபெற்ற இந்த கலவரத்தின்போது பெண்கள் நிர் வாணமாக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்ட வீடியோ வெளியாகி இந்தியா முழுவதிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தின.

ஓராண்டாகியும் அங்கு இன் னும் கலவரம் ஓயவில்லை. இதுவரை வன்முறைச் சம்பவங்களில் 200 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். மணிப்பூரில் கலவரம் இன்னும் ஓயாத நிலையில் ஏராளமான மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கி உள்ளனர்.

இந்த நிலையில், ஜிரிபாம் மாவட்டம் புதாங்கல் பகுதியில் உள்ள மைத்தேயி இனத்தைச் சேர்ந்த 2 நபர்களின் வீடுகளுக்கு நேற்று முன்



தினம் அதிகாலை ஒரு கும்பல் தீவைத்துள்ளது. அப்போது அந்த வீட்டில் யாரும் இல்லை. இந்தத் தீ அடுத்தடுத்த வீடுகளுக்கும் பரவியது. இந்த சம்பவத்தில் 70 இற்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து சாம்பலாயின.

இந்த சம்பவத்தால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ஜிரிபாம் மாவட்டத்தில் இருந்து ஏராளமான மக்கள் அங்கிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு இந்த சம்பவம் நடந்துள்ளது. தீ வைக்கப்பட்ட சம்பவம் அறிந்ததும் புதாங்கல் பகுதியை உள்ளடக்கிய போரோபெக்ரோ போலீஸ் நிலைய பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். தீயணைப்பு வண்டிகள் வரவழைக்கப்பட்டு தீ அணைக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 6 ஆம் திகதி காணாமல் போன ஒருவர் அங்கு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார். அந்த உடலில் இருந்து தலை வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தால் அங்கு மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# காசா மக்கள் பட்டினியில் உயிரிழக்கும் அபாயம் கடுமையாக எச்சரிக்கின்றது ஐக்கிய நாடுகள் சபை

காசாவில் உணவு விநியோகம் சிக்கலில் இருப்பதால் அங்கு பட்டினி காரணமாக ஏராளமான காசா மக்கள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பலஸ்தீனத்தை இஸ்ரேலின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க பல்வேறு ஆயுதம் ஏந்திய குழுக்கள் செயல் பட்டு வரும் நிலையில் ஹமாஸ் அமைப்பு கடந்த ஆண்டு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது.

இதனால், இரு நாடுகளுக்கும் இடையில் தற்போது வரை போர் நீடித்து வருவதால் காசாவுக்குள் நிவாரண பொருள்கள் எதுவும் கொண்டுச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, உணவுக்கும் குடிநீருக்கும் பஞ்சம் ஏற்பட்டுள்ளதால் நோயாளிகள், கர்ப்பிணிகள் மற்றும் முதியவர்கள் உணவு கிடைக்காமல் அடுத்தடுத்து உயிரி ழந்துள்ளனர். தொற்று நோய் பாதிப்புகளும் தீவிரம



டைந்துள்ளன.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்பட்ட போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொள்வதாக ஹமாஸ் அறிவித்துள்ளது.

இருப்பினும், இஸ்ரேல் போர் நிறுத்தத்திற்கு தயாராக இல்லை என்பதால் தெற்கு காசா பகுதியில் உணவை விநியோகிக்க வாய்ப்பு இல்லை என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# சவுதியில் அதிகரித்த வெப்பம் காரணமாக ஹஜ் யாத்திரைக்கு சென்ற ஆறு பேர் பலி

சவுதியில் அதிகரித்த வெப்பம் காரணமாக ஹஜ் யாத்திரைக்கு சென்றவர்களில் ஆறு பேர் சுருண்டு விழுந்து உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு உயிரிழந்த ஆறு பேரும் தமது நாட்டைச்சேர்ந்தவர்கள் என ஜோர்டானிய வெளியுறவு அமைச்சு நேற்று தெரிவித்தது.

இந்த ஆண்டு வருடாந்த கூட்டத் தின் போது வெப்பநிலை 48 டிகிரி செல்சியஸை எட்டக்கூடும் என்று சவுதி அதிகாரிகள் எச்சரிக்கை விடுத் திருந்தனர்.

1.8 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இந்த ஆண்டு ஹஜ்ஜில் பங் கேற்கின்றனர் என்று சவுதி பொது ஆணையம் தெரிவித்துள்ளது.

ஹஜ் என்பது உலகின் மிகப்பெரிய மதக் கூட்டங்களில் ஒன்றாகும் மற் றும் சவுதி அரேபியாவின் மிகப்பெரிய வருடாந்திர நிகழ்வு ஆகும். இலங் கையைச் சேர்ந்த ஹஜ் யாத்திரி களுக்கு எவ்விதமான பாதிப்பு இல் லையென அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தென் சீனக் கடல் பகுதியில் சீனா புதிய சட்டத்தை அமல்படுத்தியது

தென் சீனக் கடல் பகுதியில் சீனா புதிய சட்டமொன்ற அமல்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த புதிய சட்ட விதிமுறைகளின்படி, எல்லை நுழைவு மற்றும் வெளியேறும் நிர்வாகத்தை மீறியதாக சந்தேகிக்கப்படும் வெளிநாட்டவர்களைத் தடுத்து வைக்க முடியும்.

அதன்படி, அவர்கள் 60 நாள்கள் வரை சீனக் கடலோரக் காவல்படையினரால் காவலில் வைக்க அனுமதிக்கப் பட்டுள்ளது.

மேலும் சீனாவின் பிராந்திய கடல் மற்றும் அருகிலுள்ள கடல் பகுதிக்குள் சட்டவிரோதமாக நுழைந்த வெளி நாட்டுக் கப்பல்களும் தடுத்து வைக்கப்படலாம் எனவும் அந் தப் புதிய சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு கடும் கண்டனம் வெளியிட்டுள்ள பிலிப் பைன்ஸ், சீன கடலோர காவல் படையின் நடவடிக்கைகள் காட்டு மிராண்டித்தனமானது எனவும் மனிதாபிமானமற்றது என்றும் விமர்சித்துள்ளது.

தென் சீன கடல் பகுதி முழுவதும் தங்களுக்கு சொந்த



மானது என தெரிவித்து வரும் சீனா, அந்த கடல் பகுதியில் செயற்கையாக உருவாக்கப்பட்ட தீவுகளை அமைத்துள்ளது.இதற்கு பிலிப்பைன்ஸ், புருனே, மலேசியா, தைவான், வியட்நாம் ஆகிய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வரு கின்றன.

மேலும், தென் சீன கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ் நாட்டு கப்பல்கள் அத்துமீறி நுழைவதாக கூறி சீனா அடிக்கடி தாக்குதலும் நடத்தி வருகிறது.

இந்த நிலையிலேயே தென் சீனக் கடல் பகுதியில் சீனா புதிய சட்டத்தை அமல்படுத்தியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

பக்கங்கள் 04
கனடா முரசு
ஞாயிற்றுக்கிழமை 16/06/2024

## யோர்க் பகுதியில் இப்போது ரேபிஸ் தொற்று அவதானிப்பு

ஒன்ராரியோ, ஜூன் 16

2024ஆம் ஆண்டுக்கான முதலாவது ரேபிஸ் சம்பவம் யோர்க் பிராந்தியத்தில் பதிவாகியுள்ளது. விட்ஸ்சேர்ச்-ஸ்டோவில்

C2




# பஸ் விபத்தில் உயிரிழந்த 17 பேருக்குமான நினைவுச் சின்னம் மனிடோபாவில் அமைப்பு

மனிடோபா, ஜூன் 16

மனிடோபாவில் பஸ் விபத்தில் உயிரிழந்த 17 பேரை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மனிடோபா முதல்வர் வெம் கீனிவ் உள்ளடங்கலாக 200 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

ஒரு வருடத்திற்கு முன்னர் இடம்பெற்ற இந்த விபத்திற்கான நினைவுச் சின்னம் மனிடோபாவின் டோபின் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

2023ஆம் ஆண்டில் கார்பேரி நகரின் கசினோவுக்கு சிரேஷ்ட பிரஜைகளை ஏற்றிச் சென்ற பஸ் விபத்துக்குள்ளாகியதில் 17 பேர் உயிரிழந்தனர்.

# நீர் விநியோகத் தடையால் கல்கரியில் அவசர நிலை!

## பிரகடனத்தில் நேற்று மேயர் ஒப்பம்

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூன் 16

கல்கரி நகரில் தடைபட்ட நீர் விநியோகம் தொடர்பாக நகரம் நேற்றைய தினம் உள்ளூர் அவசர நிலையை அறிவித்தது.

பிரதான நீர் குழாய் வெடித்தமையினைத் தொடர்ந்து, பழுதுபார்க்கும் பணி ஆரம்பத்தில் எதிர்பார்த்ததை விட மூன்று முதல் ஐந்து வாரங்கள் எடுக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஜூன் 15ஆம் திகதி காலை, உடைந்த குழாய் பற்றிய ஆய்வுகளைத் தொடர்ந்து அவசரநிலையை அறிவிப்பதற் கான ஆவணத்தில் கல்கேரி மேயர் ஜோதி கோண்டேக் கையெழுத் திட்டுள்ளார்.

இந்த அறிவிப்பு நகரத்திற்கு அசாதாரண அதிகாரங்களை வழங்குகிறது.

‘நாங்கள் இதை விரைவாகச் செய்ய முடிந்தால், நாங்கள் அதை விரைவாகச் செய்வோம், அவ்வாறு செய்ய என்னால் முடிந்த அனைத்தையும் செய்ய நான் உறுதியாக இருக்கிறேன்’ கல்கேரி மேயர் ஜோதி கோண்டேக் தெரிவித்துள்ளார்.



# ரஷ்யா கடத்திய உக்ரேனிய சிறுவர்களின் நிலை குறித்துக் கனடிய பிரதமர் சிரத்தை

ஒன்ராரியோ, ஜூன் 16

ரஷ்யாவால் கடத்தப்பட்ட உக்ரேனிய சிறுவர்களின் நிலைமை தொடர்பில் கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கவனம் செலுத்தவுள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சமாதானத்தை கட்டியெழுப்புவது தொடர்பான மாநாட்டின் போது, இந்தச் சிறுவர்கள் பாதுகாப்பாக திரும்புவதற்கு கோரிக்கையௌ விடுக்கவுள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

இத்தாலியில் இடம்பெற்ற ஜி7 நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாடு நேற்று (ஜூன் 15) நிறைவுக்கு வந்தது.

இதன்போது, கட்டுப்படுத்தப்பட்ட ரச்க்ய சொத்துக்களைப் பயன்படுத்தி 50 பில்லியன் டொலர்களை கடனாகப் பெற்று உக்ரேனிற்கு உதவுவதற்கான அமெரிக்கத் திட்டத்திற்கு கனடா ஆதரவளித்திருந்தது.

இதற்கு கனடாவும் 5 பில்லியன் டொலர்களை பங்களிப்பாக அறிவித்துள்ளது.



# ஹெமில்டனில் பள்ளிவாயிலுக்குள் நுழைந்து அடம் பிடித்த நபர் கைது

ஒன்ராரியோ, ஜூன் 16

ஹெமில்டன் பகுதியில் முஸ்லிம்களின் பள்ளிவாயிலுக்குள் ஒன்றுக்குள் பிரவேசித்து வெளியேற மறுத்த நபர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஹெமில்டன் நகரின் டவுன்டவுன் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜூன் 15ஆம் திகதி அதிகாலையில் பள்ளிவாயில் ஒன்றுக்கு நபர் ஒருவர் நுழைந்து வெளியேற மறுப்பதாக தமக்குத் தகவல் கிடைத்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் குறித்த ஆண் நபரை சம்பவ இடத்தில் இருந்து அகற்றி, கைது செய்துள்ளனர்.

உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்கு பள்ளிவாயில் நிர்வாகத்துடன் இணைந்து அறிக்கை தயாரித்து வருகின்றனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.






## யோர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் வௌவால் ஒன்று ரேபிஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மனிதர்கள் உள்ளடங்கலாக, விலங்குகளின் மத்திய நரம்புத் தொகுதியை பாதிக்கக் கூடிய, உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடிய தொற்றாக ரேபிஸ் உள்ளது.

கடித்தல், நக்குதல் அல்லது கீறுதல் போன்றவற்றால் இந்த தொற் றுப் பரவும்.

பாலூட்டி விலங்குகளால் கடிக்கப்பட்ட, நக்கப்பட்ட அல்லது கீறப்படும் சந்தரப்பத்தில் உடனடியாக இந்த இடத்தை சவர்க்காரம் இட்டு நன்கு கழுவ வேண்டும் என சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.




# ஸ்காப்ரோவில் துப்பாக்கிச் சூடு 16 வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

கனடாவின் ஸ்காப்ரோவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 16 வயதான சிறுவன் கொல்லப்பட்டுள்ளான்.

நேற்றுப் பிற்பகல் வேளையில் இந்த 16 வயது சிறுவன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந் துள்ளான்.

இந்த சம்பவம் தொடர்பில் டொரன்டோ போலீசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பிளைன்டோவர் பிளாசா பகுதியில் வாகன தரிப்பிட பகுதியில் இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பல்வேறு அங்காடிகளுக்கு எதிரில் இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளமை காணொளிகள் மூலம் தெரிய வந்துள்ளது.


துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் படுகாயம் அடைந்த சிறுவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சைகள் பலனின்றி சிறுவன் உயிர் இழந்துவிட்டான் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆண்டில் டொரன்டோவில் படுகொலை செய்யப்பட்ட 37 ஆவது நபர் இந்தச் சிறுவன் எனப் பொலிஸார் மேலும் கூறுகின்றனர்

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கனடா லொத்தரில் ஒருவருக்கு 55 மில்லியன் டொலர்கள் பரிசு




கனடாவின் டொரன்டோ பெரும் பாகப்பகுதியில் நபர் ஒருவர் 55 மில்லியன் டொலர் பணப் பரிசை வென்றுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற லோட்டோ மேக்ஸ் லொத்தர் சீட்டிலுப்பில் இவ்வாறு பணப்பரிசு வென்றெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மில்டன் பகுதியில் இந்த லொத்தர் சீட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக ஒன்றாரியோ லொத்தர் மற்றும் விளையாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த லொத்தர் சீட்டிலுப்பில் வேறும் பரிசுகளும் வென்றெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்றைய தினம் இரவு நடைபெற உள்ள மற்றுமொரு லொத்தர் சீட்டிலுப்பில் 66 மில்லியன் டாலர் ஜாக்பாட் பரிசு, காத்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆள்கட்டத்தல் குழு நடவடிக்கையால் எட்டுக் குடியேற்றவாசிகள் உயிரிழப்பு

கியூபெக், ஜூன் 16

அண்மையில் ஆர்.சி.எம்.பியின ரால் கலைக்கப்பட்ட ஆள்கட்டத்தல் குழுவானது எட்டுக் குடியேற்றவாசி களின் மரணத்திற்குக் காரணமாக இருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த வருடம் சென் லோரன்ஸ் நதியின் ஊடாக அமெரிக்காவிற்குள் பிரவேசிக்க முயற்சித்த போதே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

இந்தியர்கள் நால்வர் மற்றும் நான்கு ரோமானிய நாட்டவர்கள் கடந்த வருடம் மார்ச் மாதம் உயிரி ழந்தனர். இதனைத் தொடர்ந்து, ஜூன் மாதம் 6ஆம் திகதி நால்வர் கைது செய்யப் பட்டனர் என பொலிஸார் அறிவித்தனர்.

# பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரானுடன் கனேடிய பிரதமர் ட்ரூடோ சந்திப்பு




ஜி7 மாநாட்டில் பிரான்ஸ் ஜனா திபதி இமானுவல் மேக்ரானுடனான சந்திப்பு குறித்து கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதிவிட்டுள்ளார்.

இத்தாலியில் ஜி7 மாநாடு நேற்று டன் முடிவடைந்தது. இதில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மேக்ரான், கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா உள்ளிட்ட தலைவர்கள் கலந்துகொண் டனர்.

அப்போது கனேடிய பிரதமர் ஜஸ் டின் ட்ரூடோ, பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மேக்ரானைச் சந்தித்துப் பேசினார்.

அதனைத் தொடர்ந்து கனடா மற்றும் பிரான்ஸ் நாடுகளின் கூட் டணி குறித்து ட்ரூடோ பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவில், "கனடாவும், பிரான்ஸும் இப்போது அட்லாண்டிக் கடல் கடந்த பாதுகாப்பை வலுப்படுத்துவது, தவறான தகவல்களை எதிர்த்துப் போராடுவது, நமது ஜனநாயகத்தைப் பாதுகாப்பது என மிக முக்கியமான வேலைகளில் கூட்டாளிகளாக உள்ளன. இப்போது இதுதான் முக்கியமான வேலை. இந்த வாரம் ஜி7 மாநாட்டில் இமானுவல் மேக்ரானுடன் நான் விவாதிக்க நிறைய இருந்தது" என தெரிவித்துள்ளார்.